1971 ஜூலை 28]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நாகையிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து நாகைக்கும் பாண்டியன் என்ற பெயராலே ஆமனி பஸ்கள் ரெகுலர் சர்வீஸ் போன்று ஓடிக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களைத் தடுப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. ஆனால் இப்பொழுது இரவு நேரப் பேருந்துகளை அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் மூலமாக நாகப்பட்டினத்திற்கும் தஞ்சாவூருக்கும் விட ஆகஸ்டு மாதத்தில் உத்தேசித்து இருக்கிறோம்.

* 520 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்துகளின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசிலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து நாகைக்குப் புறப்படுகின்றவர்களுக்கும் நாகையிலிருந்து சென்னைக்கு நீண்ட தூரப் பயணம் செய்து வரக்கூடியவர்களுக்கும் முதலிடம் தந்து இத்தகைய முறையிலே புறப்படக்கூடிய இடத்திலிருந்து சேரக்கூடிய இடம்வரையில் இடையிலுள்ள ஸ்டாப்புகளில் நிற்காமல் சென்னைக்கும் நாகைக்கும் இடையே பஸ்கள் விட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 28-லிருந்து 35 வரை ஒரு மணிக்குச் செல்லலாம் கடுந்தொலைவு பேருந்துகள் என்று விதி முறை இருக்கிறது. அதிகமாக வேகம் சென்றால் ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுமோ என்ற நிலைமை இருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்க்கின்ற முறையிலே ஆங்காங்கு அனாவசியமாக நிற்கின்ற இடங்களைப் பற்றி மறுபரிசிலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரத்தில் அரசு பேருந்து பணிமனை

* 521 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்தில் அரசு பேருந்து நிலைய பணிமனை ஒன்று அமைத்திடும் திட்டம் ஏதேனும் தற்போது பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்திலே நிறுத்தப்படும் அரசாங்க பஸ்களுக்கு ரிப்பேர், கழுவுதல் போன்றவற்றைச் செய்வதற்காக தனியாரிடத்திலே செல்லவேண்டிய சூழ்நிலையில் அவற்றை அரசே செய்து கொள்ளக்கூடிய முறையிலே அரசே அத்தகைய சாலைகளை அமைக்கத் திட்டமிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாயூரத்தில் இப்பொழுது இரண்டு பேருந்துகள்தான் தங்குகின்றன. மீதிப் பேருந்துகள் மாயூரத்தைத் தொட்டுத்தான் செல்கின்றன. அந்த இரண்டு பேருந்துகளைப் பேணுவதற்காக அருணுசலம் அய்யர் அண்டு சன்ஸ் என்ற தனியாரிடம் விட வேண்டி இருக்கிறது. ஒரு வண்டிக்கு நாள் ஒன்றுக்கு 4 ரூபாய் வீதமும் வாரத்திற்கு 10 ரூபாய் வீதமும் கொடுக்கப்பட்டு பேணுதல் முறை செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாட்டுடமையாக்கும் திட்டத்தின் மூலம் அதிக பஸ்கள் எடுக்க இருப்பதால், மாயூரத்தில் ஒரு பணிமனை அமைக்கலாமா என்பதை அரசு பின்னலே பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தனியாரிடத்திலே ஒரு பஸ் இருந்தால் கூட ஒரு கிளீனர் போட வேண்டுமென்று எல்லாம் அரசாங்கம் சொல்கிறதே, அப்படியிருக்கும்பொழுது அரசாங்கம் தன்னுடைய பஸ்களுக்கு அப்படிச் செய்யமுன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிதி வசதிகள் பெருகப் பெருக அத்தகைய முறைகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. கணபதி: தலைவர் அவர்களே, குடந்தையைத் தொட்டுக் கொண்டு அரசாங்கப் பேருந்துகள் செல்கின்றன. அங்கே எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அன்ட் ராமன் போன்ற கம்பெனிகள் இருக்கின்றன அவற்றை தேசிய மயமாக்குவதற்கு சட்டம் இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது அந்த இரண்டு கம்பெனிகளின் தொழிற்கூடங்களையும் அரசாங்கமே மேற்கொள்ள உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாட்டுடமை யாக்குகின்ற சட்டம் வரவிருக்கிறது.

சாலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிதி உதவி

* 522 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

சாலை விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கு உதவி நிதி அளிக்க தமிழ்நாடு அரசு திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழக அரசு தனித்திட்டம் வகுக்கவில்லை. 1939-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 110 (எ) பிரிவு அதற்கு வகைசெய்கிறது. உதவிநிதி நீதிமன்றங்கள் மூலமாகப் பெறலாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் மூலமாக பெறுவது ஒரு நிலையிலே இருந்தாலும், விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் திக்கற்ற ஏழை எளிய குடும்பங்களாக இருக்கின்ற காரணத்தினுல் அவர்களுக்கேனும் அரசு நிதி உதவி செய்ய முன்வருமா?